People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org Web: www.pwtn.org

**மாண்புமிகு. தமிழக முதல்வர் அவர்கள்,**
தமிழ்நாடு அரசு,
தலைமைச் செயலகம்,
சென்னை 600 009.

பேரன்புடையீர்

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கங்கள்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக மனித உரிமை செயல்பாட்டுத் தளத்தில் இயங்கி வருகிறது. கடந்த ஆண்டு முதல் சித்ரவதைத் தடுப்பிற்கான தேசியத் திட்டத்தில் இந்தியா முழுவதிலுமுள்ள 10 மாநிலங்களிலும் செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும், மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

தாங்கள் இச்சம்பங்களில் உடனடியாக தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்
1. அனைத்து மாவட்ட ஆட்சியர்களுக்கும்
2. அனைத்து மாவட்ட காவல்துறைக் கண்காணிப்பாளர்களுக்கும்
3. அனைத்து அரசியல் கட்சிகளுக்கும்

மக்கள் கண்காணிப்பகம்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் - தொகுப்பு
## 13.09.2009 முதல் 30.09.2009 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| **78.** | 13.09.09 | **விழுப்புரம் மாவட்டம்:** திருக்கோவிலூர் வட்டம் மணலூர்போட்டை அருகே காங்கினூர் கிராமத்தில் திரௌபதி அம்மன் கோவில். தலித்து மக்கள் சாமியை வழிபட அனுமதிக்கவில்லை, அதனை மீறி கடந்த 7ந் தேதி பொங்கல் பானையுடன் கோவிலுக்குச் சென்ற தலித் இளைஞர், மற்றும் பெண்களை ஆதிக்க சாதியினர் தாக்கினார், இது தொடர்பாக காவல்துறையினர் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. | தலித் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **79.** | 13.09.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தேன்கனிக்கோட்டை அருகில் உள்ள கெம்பத் பள்ளி கிராமம். இங்கு வசிக்கும் தலித் மக்களுக்கு சொந்தமாக சுடுகாடு இல்லாததால் இக்கிராமத்தைச் சேர்ந்த ஞானம்மை(55) என்பவரின் இறந்த பிணத்தைக் கொண்டு தலித் மக்கள், சாலை மறியலில் ஈடுபட்டனர் காவல்துறையினர் மற்றும் வருவாய் துறையினர் சேர்ந்து பேச்சு வார்த்தை நடத்தியதில் சுடுகாடு அமைத்து தறுவதாக கூறினர். | தலித் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **80.** | 13.09.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை விடுதியில் உள்ள அணைப்பட்டி பேரணை. பகுதியில் வைகை ஆற்று மணல் பகுதியில் மணல் திருடிய டிராக்டர் பறிமுதல். | மணல் கடத்தல் | தமிழ்சுடர் |
| **81.** | 13.09.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் பழைய பஸ் நிலைம் அருகில் உள்ள ஊரணிபெட்டி தெருவைச் சேர்ந்தவர் முனியாண்டி இவரது மனைவி மாரியம்மாள். கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் மரியம்மாள் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **82.** | 13.09.09 | **சென்னை மாவட்டம்:** கொண்டிதோப்பு காவலர் குடியிருப்பில் எம்' பிளாகினைச் சேர்ந்தவர் துரைமுருகன். இவர் மணலியில் போக்குவரத்து போலீஸாக வேலைபார்த்து வருகிறார், இவரது மனைவி புவனேஸ்வரி இவர்களுக்கு இரண்டு குழந்தைகள், இந்நிலையில் கணவன் மனைவியிடையே ஏற்பட்ட குடும்பதகராரில் துரைமுருகன் புவனேஸ்வரியை எரித்து கொலை செய்தார், இது குறித்து ஏழுகிணறு போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **83.** | 13.09.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** கொல்கத்தாவைச் சேர்ந்தவர் அசோக் சஹா(37). இவர் கும்மிபூண்டி அருகே கங்கன் தொட்டி கிராமத்தில் தங்கி வேலை செய்தார் இவரது | குழந்தைகளுக்கு எதிரான வன்முறை | தினதந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மனைவி சப்திகா, இவர்களுக்கு மூன்று குழந்தைகள் அசோக் குடிபழக்கம் உடையவர் குடிப்பதற்கு பணத்திற்காக, தனது கடைசி குழந்தையை 7 ஆயிரம் பணத்திற்கு அன்பு என்ற குடும்பத்திற்கு விற்றார், இது குறித்து கும்மிபூண்டி காவல் நிலையத்தில் புகார். | | |
| **84.** | 13.09.09 | **மதுரை மாவட்டம்:** சிவகங்கை தேவகோட்டையைச் சேர்ந்தவர் காளிமுத்து என்பவரின் மகன் பாலமுருகன். இவரது 16 வயதில் பெண்மைக்கான மாற்றங்கள் ஏற்பட்டு வீட்டை விட்டு ஒதுக்கப்பட்டார், தனது பெயரை மதுரையில் ஜெசிபலா என மாற்றிக் கொண்டார். விழுதுகள் அறக்கட்டளையில் பணிபுரிந்தார் இவர் மதுரை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக இருக்கும்போது கடத்தப்பட்டு தனி அறையில் வைத்து பாலியல் பலாத்காரம் செய்ததாக ஜெசிபாலா அரவாணி தல்லாக்குளம் போலீசில் புகார். | அரவாணிகளுக்கு எதிரான வன்முமறை | தினத்தந்தி |
| **85.** | 14.09.09 | **துத்தூக்குடி மாவட்டம்:** குற்றபிரிவு போலிசில் இன்ஸ்பெக்டர்ராக பணியாற்றி வருபவர் ஜார்ஜ் ஜோக்கப். இவரது மகளுக்கு பெங்களூரில் என்ஜினராக பணிபுரியும் கெவின் என்பவருக்கும் விருதுநகரில் திருமணம் நடந்தது. கணவர் மனைவியிடையே ஏற்பட்ட தகராரில் ஜார்ஜ் மகள் கெவின் பெற்றோர் மீது வரதட்சனை வழக்கு சாத்தூர் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளார், ஜார்ஜ் ஜேக்கர், சிலரவுடிகளை கொண்டு கெவின் குடும்பத்தார்க்கு கொலை மிரட்டல் விடுத்துள்ளதாக உயர் போலீஸ் அதிகாரிகளிடம் புகார் கொடுத்துள்ளார். மற்றும் மதுரை கோர்டில் வழக்கு தொடர்ந்துள்ளார். | காவல் நிலையை வன்முறை | தினத்தந்தி |
| **86.** | 14.09.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஆர் கல்லுப்பட்டியைச் சேர்ந்தவர் தமிழ்சந்திரன் இவரது மனைவி கலாராணி. மதிர்சந்திரன் ததனது மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்டு தூங்கி கொண்டிருக்கும் போது தலையில் கல்லைபோட்டு கொலை செய்தார் இது குறித்து ---- காவல் நிலையத்தில் புகார் | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **87.** | 14.09.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கச்சதீவு பகுதியில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் அடித்து சித்திரவதை செய்து படகுகளை உடைத்தனர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **88.** | 15.09.09 | **மதுரை மாவட்டம்:** கல்லுப்பட்டி அருகே கரைக் கேனியைச் சேர்ந்தவர் பழனிச்சாமி(40). இவர் கொலை வழக்கு தொடர்பாக கைது செய்யப்பட்டு, மதுரை மத்திய சிறைசாலையில் அடைக்கப்பட்டார், இவருக்கு, நெஞ்சுவலி ஏற்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு | காவல் நிலைய வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | செல்லும் வழியில் பழனிசாமி இறந்தார், இது குறித்து கரிமேடு காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | | |
| **89.** | 15.09.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** ஒசூரை அடுத்த நீளகிரி அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் ராஜம்மாள் மகள் சுஷ்மா. இவரை அப்பள்ளியில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர் சுரேஷ்குமார்(24). அவரால் பாலியல் பலாத்காரம் செய்யப்பட்டார், இது தொடர்பாக முதன்மை கல்வி அலுவலர் மூலம் போலீஸில் புகார் கொடுக்கப்பட்டது | பள்ளி வன்முறை | தினமலர் |
| **90.** | 15.09.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி பரமத்தேவர் தெருவைச் சேர்ந்தவர் கருப்பையா மகள் ராமேஸ்வரி(21). இவருக்கும் கோவைச் சேர்ந்த ஆயுதப்படை காவலர் பழனியாண்டிக்கும் திருமணம் நடந்து 3 மாத குழந்தை உள்ளது. கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் பழனியாண்டி தனது போலீஸ் சகோதரர் மூலம் ராமேஸ்வரியின் உறவினர்களை தாக்கினர், இது குறித்து உசிலம்பட்டி போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| **91.** | 15.09.09 | **திருநெல்வேலி மாவட்டம்:** தென்காசியில் மகாகவி பாரதியின் நினைவு தினத்தையொட்டி புத்தகாலயம் சார்பில் புத்தக விற்பனை நடைபெற்ற போது அங்கு வந்த காவலர்கள், ஐந்து பேர் மீது காழ்புணர்ச்சி கொண்ட மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் தலைவர்கள் மீது பொய் வழக்கு போட்டு சிறையில் அடைத்துள்ள தென்காசி காவல்துறையினரை கண்டித்து ஆர்பாட்டங்கள் நடைபெற்றன. | காவல் நிலைய வன்முறை | தீக்கதிர் |
| **92.** | 16.09.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஷ்வரத்தைச் சேர்ந்த மணியரசன் , நாகாச்சியைச் சேர்ந்த முருகேசன், மண்டபத்தைச் சேர்ந்த தாகிர்யஹீசேன், ஆகியோர்க்கு சொந்தமான 3 விசைப்படகுகளில் மண்டபம் அருகில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களை இலங்கை கடற்படையினர் தாக்கி விரட்டியுள்ளது. | மீனவர் எதிரான வன்முறை | தினகரன் |
| **93.** | 16.09.09 | **விழுப்புரம் மாவட்டம்:** கள்ளக்குறிச்சி அருகே கிழாத்துக்குள் கிராமத்தைச் சேர்ந்த சடையன் மகள் சுந்தராஜீக்கும். அதே ஊரைச் சேர்ந்த சென்னம்மாள்(18), என்பவருக்கும் நேற்று முன்தினம் திருமணம் நடந்தமுடிந்ததும் மணப்பெண் மீது மாமானர், நாட்டு வெடி குண்டுவைத்து சுட்டு விட்டார். சென்னம்மாள் தீவிர சிகிச்சை பெற்று வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **94.** | 16.09.09 | **மதுரை மாவட்டம்:** செக்காலூரணியை சேர்ந்தவர் ஆபிதா(20) இவர் கர்ப்பிணி பெண். இவரது கணவர் சரவணவன் மற்றும் சகோதரர் | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஜெகன் இருவரையும் சுரண்டை போலீசார் சப்–இன்ஸ்பெக்டர் திருப்பதி சட்டவிரோதமாக கைது செய்து துன்புறுத்துவதாக மதுரை ஐகோட்டில் புகார். | | |
| 95. | 16.09.09 | **மதுரை மாவட்டம்:** திருப்பரங்குன்றம் கீழத்தெரு நடுவீதியைச் சேர்ந்தவர் சீனி மனைவி மகேஷ்வரி இவரை விடுதலை சிறுத்தை கட்சியின் நகர செயலாளர் கருப்பசாமி மாணபங்க படுத்தா முயன்றதாக திப்பரங்குன்றம் போலீஸரால் கைது செய்யப்பட்டார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 96. | 16.09.09 | **திருச்சி மாவட்டம்:** அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டானைச் சேர்ந்தவர் விரமணி(38). இவரை குண்டர் தடுப்பு சட்டத்தில் திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். திருச்சி எடமலைப்பட்டி புதூரைச் சேர்ந்த ரவுடி சந்திரமவுலி தேசிய பாதுகாப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்ட இருவருக்கும் தகராறு ஏற்பட்டு வீரமணி மண்டை உடைக்கப்பட்டு மருத்துவமணையில் சிகிச்சை அளிக்கப்பட்டது. | காவல் நிலைய வன்முறை | தினமணி |
| 97. | 16.09.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** ஜமுனாமத்தூர் அடுத்த பெருங்காட்டூர் கிராமத்தைச் சேர்ந்தவர் அண்ணாமலை மகள் உஷா. இவரும் அதே பகுதியைச் சேர்ந்த ராஜீ மகன் தாமோதரனை காதலித்து வருகிறார் இந்நிலையில் தாமோதரனின் ஆசைக்கு இணங்க மறுத்த காதலி உஷாவை நாட்டு துப்பாக்கியால் சுட உஷா தப்பி ஒடினார் இது குறித்து போலீஸார் வழக்கு பதிவு செய்து தாமோதரனை தேடி வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 98. | 16.09.09 | **மதுரை மாவட்டம்:** எல்லீஸ் நகர் டாக்டர் சார்லஸ் அகஸ்டசுக்கும் தூத்துக்குடி டாக்டர் எட்னாகெஸ்மாவுக்கும் 2005ல் திருமணம் நடைபெற்றது. இருவரும் கருத்து வேறுபாட்டால் பிரிந்து வாழ முடிவு செய்து விவாகரத்துக்கு மனு செய்துள்ளனர். இந்நிலையில் சார்லஸ் அகஸ்டசு எட்னாகெஸ்மாவுக்கு ஆபாச எஸ்.எம்.எஸ் அனுப்பியதாக நெல்லை டி.ஐ.ஜியிடம் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 99. | 16.09.09 | **நீலகிரி மாவட்டம்:** கூடலூரைச் சேர்ந்தவர் சுகுமாரன். இவர் மக்களிடம் பணம் வசூலித்து தவனை மறையில் பொருன் விற்பனை செய்து வருகிறார், இவரிடம் பெரோஸ் என்பவரின் தாய் 300ரூ கட்டியுள்ளார். அதனை திரும்பகேட்டுள்ளார், மறுத்த சுகுமாரனை கன்னை தோண்டினார். இது குறித்து போலீஸார் விசாரித்து வருகின்றனர். | | தினமலர் |
| 100. | 16.09.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** தஞ்சை மாவட்ட மீன் தொழிலாளர் சங்கத்தைச் சேர்ந்த சேதுபாவா சத்திரம் விசைப்படகு மீனவர்கள். கொத்தடிமைத் தன்மையிலிருந்து விடுதலைக் | மீனவர்கள் மீதான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | கேட்டு, அடையாள அட்டை திரும்பகேட்டு, நியாயமான கூலி உயர்வு போன்ற கோரிக்கை கேட்டு பட்டுக்கோட்டை கோட்டாசியர் அலுவலகம் முன்பு ஆர்பாட்டம் நடத்தினர். | | |
| **101.** | 17.09.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத்தில் துணைவட்டார வளர்ச்சி அலுவலர் முனியாண்டி. இவர் குல்லிசெட்டிபட்டி மக்கள் நலப்பணியாளராக பணியாற்றுபவர் வசுமதி செட்டியபட்டி அருகே உள்ள கன்னிமார் கோவில் முடக்கு அத்திமரக்கண்மாயில் நூறுநாள் வேலைதிட்டத்தை பார்வையிடச் சென்று எ.பி.டி.ஓ. முனியாண்டி, வசுமதியை ஜீப்பிற்குள் வைத்து பாலியல் பலாத்காரம் செய்யமுயன்றுள்ளார்., இது குறித்து நிலக்கோட்டை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் காவலர்கள் எந்த வித நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **102.** | 17.09.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அழகர்கோவில் சாலை தாமரை தொட்டி அருகே பாஸ்போட்டு அலுவலகம் உள்ளது. இங்கு பாஸ்போர்ட் விண்ணப்பம் செய்தவர்களை புரோக்கர்கள், அனுகி பணபறித்த புரோக்கர்களான செல்வகுமார், ஆனந்தி, ஆறுமுகம், ஆகியோரை தல்லாக்குளம் காவல்நிலைய காவலர்களால் கைது செய்யப்பட்டனர். | மோசடி | தினத்தந்தி |
| **103.** | 17.09.09 | **சென்னை மாவட்டம்:** அமைந்தகரை மேத்தா நகரில் உள்ள பாலிடெக்னில் பயிலும் கருணாகரன் மகள் கீதாபிரியா, சந்தியநாராயணனின் மகள் ஸ்வேதா, பழனி மகள் ஷேபனா, ராஜேந்திரன் மகள் சங்கீதா, மேற்கண்ட மாணவிகள் கல்லூரி சென்றவர்கள் வீடு திரும்பவில்லை இது குறித்து போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **104.** | 18.09.09 | **கிருஷ்ணகிரி மாவட்டம்:** தேன்கனிக்கோட்டை வட்டம் அஞ்செட்டி அருகில் உள்ள சேசுராஜபுரம் இங்கு வசிப்பவர் சந்தானமேரி–24. இவரது கணவர் ஆரோக்கிசாமி எச்.ஐ.வி தாக்கப்பட்டு இறந்துள்ளார். கணவனிடமிருந்து நோய் தொற்று ஏற்பட்ட இவரை சேசுராஜப்புரத்தைச் சேர்ந்தவர்கள் இழிவு படுத்தி போசியுள்ளனர். இது குறித்து அஞ்செட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததில் காவலர்கள் சந்தானமேரியிடம் 2 அயிரம் ரூபாய் வசூலித்தனர். காவல் நிலையத்தில் புகார் கொடுதற்காக சந்தானமேரியின் குடும்பத்தாரை ஊர் பஞ்சாயத்தார்கள் ஊரைவிட்டு ஒதுக்கி வைத்துள்ளனர். | சமூக புறக்கணிப்பு | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| **105.** | 18.09.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமேஷ்வரத்தில் இருந்து மீன் பிடிக்கச் சென்ற 21 மீனவர்கள், 5 விசைப்படகுகளை இலங்கை கடற்படையினர் துப்பாக்கி முனையில் சிறைபிடித்துச் சென்றுள்ளனர். | மீனவர் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **106.** | 18.09.09 | **திருப்பூர் மாவட்டம்:** தாராபுரம் பொள்ளாச்சி ரோட்டில் 120 மூடை ரேஷன் அரிசியை கடத்த முயன்ற டெம்போவை, சோதனை சாவடியில் வைத்து போலீஸார் கைப்பற்றினர். | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| **107.** | 18.09.09 | **மதுரை மாவட்டம்:** உசிலம்பட்டி அருகே உள்ள சடச்சிப்பட்டி ஊரில் உள்ள ரேஷன் கடையிலிருந்து ரேஷன் அரிசியைச் கடத்த முயன்ற போது பொதுமக்கள் பிடித்து அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர், காவல்துறையினர் நடவடிக்கை எடுக்காததால் பொதுமக்கள் பஸ் மறியலில் ஈடுபட்டனர். | ரேசன் அரிசி கடத்தல் | தினத்தந்தி |
| **108.** | 18.09.09 | **கடலூர் மாவட்டம்:** முதுநகரை சேர்ந்தவர் தௌஷக்அலி(41) இவரது வீட்டில் 3கேஸ் மின் இணைப்பு கொடுக்க சிங்கார தோப்பு மின் அலுவலகத்தில் வணிக ஆய்வாளர் சக்திவேல் 1000 ரூபாய். லஞ்சம் பெற்றதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| **109.** | 18.09.09 | **மதுரை மாவட்டம்:** நேதாஜி சாலையில் அனுமார் கோவில் சந்து இப்பகுதியை பொதுமக்கள் சந்தை பிரதான நடை பாதையாக பயன்படுத்தி வருகின்றனர் இதை மறைத்து திமுக கவுன்சிலரின் உறவினர் ஒருவர் கடை வைத்துள்ளார். இதனை எதிர்த்து இப்பகுதி மக்கள் சுரேஸ்குமார் தலைமையில் தீடிர் நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தனர். புகார் கொடுத்த சுரேஸ்குமாரை விசாரனைக்காக காவலர்கள் அழைத்து சென்றனர் அவர் மீது பொய் வழக்கு போட்டுள்ளனர் | --------- | தினமணி |
| **110.** | 19.09.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** சிவகளை முருகன் மனைவி ஷீலாபாய்(34) இவர் மதுரையில் உள்ள தனியார் பள்ளியில் ஆசிரியராக உள்ளார், இவர் வாரிசு சான்றிதழ் கேட்டு ஸ்ரீவைகுண்டம் தாலுகா அலவலகத்தில் விண்ணப்பித்து பல மாதங்களாக கிடைக்காததால் தூத்துக்குடி கலெக்டர் அலுவலகத்தில் புகார் கொடுக்க வந்தபோது தூக்கமாத்திரை சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்றுள்ளார் இது குறித்து சிப்காட் போலீஸார் விசாரனை. | | தினமலர் |
| **111.** | 19.09.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலமட்டையான் கிராமத்தைச் சேர்ந்த போலீஸ் முத்துப்பட்டியைச் சேர்ந்த கவிதாவும் காதல் திருமணம் செய்து கொண்டனர், கணவன், மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் கவிதா தீக்குளித்து | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | தற்கொலை செய்துகொண்டார் இது குறித்து சுப்பிரமணியபுரம் போலீஸார் விசாரனை மற்றும் R.D.O. விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. | | |
| **112.** | 19.09.09 | **சென்னை மாவட்டம்:** சோழவரம் நேருதெருவைச் சேர்ந்தவர் பிரகாஷ் (எ) ஞானப்பிரகாஷ் மகன் பிரதீப் (10) இவர் ஊராட்சி ஒன்றியபள்ளியில் 5ம் வகுப்பு படிக்கிறார் இவரை ஆசிரியை, திட்டியதால் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து சோழவரம் சப் இன்ஸ்பெக்டர் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகிறார். | பள்ளி வன்முறை | தினகரன் |
| **113.** | 19.09.09 | **சேலம் மாவட்டம்:** தமிழ் நாடு கூட்டுறவு வீட்டு வசதி சங்க பணியாளர்கள் சங்கத்தின் மாநில பொது செயலாளர் முருகேசன். வீட்டு வசதி சங்க ஊழியர்களிடம் ஊதிய உயர்வு வாங்கி தருவதாக கூறி 6 லட்சம் ரூபாய் லஞ்சம் பெற்றதாக லஞ்ச ஒழிப்பு காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினகரன் |
| **114.** | 19.09.09 | **மதுரை மாவட்டம்:** மாடக்குளத்தைச் சேர்ந்தவர் செந்தில்குமார், இவரது மனைவி பாண்டீஸ்வரி கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையால் பாண்டீஸ்வரி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து ஆண்டாள்புரம் காவலர்கள் விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **115.** | 20.09.09 | **தஞ்சாவூர் மாவட்டம்:** பட்டுக்கோட்டை ஒன்றியம் தாமரங்கோட்டையில் பொது இடத்தில் உட்கார்ந்த தினேஷ் என்ற வலிபரை ஆதிக்க சாதியைச் சேர்ந்த வக்கீல் சாமிதுரையின் மகன் சக்திவேல் சாதியை சொல்லி திட்டியும் தாக்கியுள்ளார். இதில் தாமரங்கோட்டை மற்றும் செக்காரணவூரணிக் கிராமங்களில் சாதி வெறித் தாக்குதல் இதுகுறித்து பட்டுகோட்டை காவலர்களிடம் புகார் கொடுத்தும் காவலர்கள் ஆதிக்க சாதியினர் சார்பாக செயல்படுகின்றனர். | தலித் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **116.** | 2009.09 | **சேலம் மாவட்டம்:** ஜாகிர் அம்மாப்பாளையைத்தைச் சேர்ந்தவர் சாந்தி இவர் தனியார் கல்லூரியில் பேராசிரியராக பணியாற்றுகிறார் இவரது கணவர் சரவணரவி இவரது கணவர் கூடுதல் வரதட்சனை கேட்டும், 2வது திருமணம் செய்ய போவதாக மிரட்டுகிறார் என்று தமிழக போலீஸ் டி.ஜி.பி. யிடம் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **117.** | 20.09.09 | **மதுரை மாவட்டம்:** வெங்கடசலாபுரத்தைச் சேர்ந்தவர் கனகவேல்(32) இவருடைய மனைவி ரேவதி. தன் கணவனின் கள்ளக்காதலை தட்டிக் கேட்ட ரேவதியை எரித்து கொலை செய்யப்பட்டார். இது குறித்து ஆண்டாள்புரம் போலீஸார் விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| **118.** | 20.09.09 | **விருதுநகர் மாவட்டம்:** ஸ்ரீவில்லிபுத்தூர் அருகே காந்திநகர் ஒத்தப்பட்டியைச் சேர்ந்தவர் மாயகிருஷ்ணன் இவருடைய மகள் முத்துலட்சுமி. இவரது கணவர் கர்ணன் வேறு பொண்ணுடன், கள்ளதொடர்பு வைத்திருந்ததாகவும் அதை கண்டித்த மனைவியை அடித்துக் கொலை செய்தார் இதுகுறித்து மாயகிருஷ்ணன் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| **119.** | 20.09.09 | **மதுரை மாவட்டம்:** விஸ்வநாதபுரத்தைச் சேர்ந்தவர் டேவிட் கிறிஸ்டோபர் இவரது மனைவி கலா இவரது மகனை பராமரிப்பது தொடர்பாக கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் கலா தூக்கமாத்திரை சாப்பிட்டு தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து ஊமச்சிகுளம் காவலர்கள் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **120.** | 20.09.09 | **சென்னை மாவட்டம்:** இந்திய உணவு கழகத்தில் சென்னை மண்டல அலுவலகத்தில் பொது மேலாளராக இருப்பவர் ஜெயகுமார் அதே மண்டலத்தில் துணை பொது மேலாளராக இருப்பவர் துரைராஜ் இருவரும் பல்வேறுபகுதியில் மேலாளர்களுக்கான கூட்டம் நடை பெறுவதாக கூறி லஞ்சம் பெற்றதாக லஞ்ச ஒழிப்பு துறை காவலர்களால் கைது செய்யப்பட்டனர். | லஞ்ச ஊழல் | தினமலர் |
| **121.** | 21.09.09 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி அருகே உள்ள பிள்ளப்பட்டி சுட்டிப்பாறையைச் சேர்ந்தவர் மாணிக்கம், இவரது மகள் செண்பகாதேவி, இவரை தொந்திலிப்–––– சேர்ந்த அழகுமணி, மற்றும் அவரது மனைவி பூபதி மற்றும் நண்பர்களால் செண்பகாதேவி கடத்தப்பட்டதாக கொட்டாம்பட்டி போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **122.** | 21.09.09 | **மதுரை மாவட்டம்:** உத்தங்குடியைச் சேர்ந்தவர் முத்துகுமார்(25) இவரது மனைவி முத்துமாரி. முத்துமாரியின் தங்கையை தனக்கு திருமணம் செய்யக் கோரி மனைவியை சித்திரவதை செய்ததாக ஒத்தக்கடை போலீஸாரால் கைது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினதந்தி |
| **123.** | 21.09.09 | **மதுரை மாவட்டம்:** கள்ளிக்குடி அருகே உள்ள குராயூரில் அருந்ததியர் மக்களுக்குகான மயானம் அமைக்க முடிவு செய்யப்பட்டது. பாலுச்சாமி என்பவரிடம் 15 சென்ட் இடத்தை அரசு கைப்பற்றியது இந்நிலையில் குராயூரில் அருந்ததியர் சமுகத்தைச் சேர்ந்த ஒருவர் உடல்நலமின்றி இறந்தார் மயாணத்தில் இடம் கொடுத்தவர் புதைக்க மறுப்பு பின்னர், திருமங்கலம் தாசில்தார் காவல் துறையினர், பேச்சுவார்த்தையின் மூலம் புதைக்கப்பட்டது. | தலித் எதிரான வன்முறை | தீக்கதிர் |

| | | | | |
|---|---|---|---|---|
| **124.** | 21.09.09 | **சேலம் மாவட்டம்:** சிவதரபுரம் மலங்காட்டான் தெருவைச் சேர்ந்தவர் ரமேஷ்குமார்(30) இவரது மனைவி ராஜகுமாரி. தீராத புற்றுநோயினால் அவதிப்பட்டு தன் மகன் ராகுல் மற்றும் தானும் விஷம் அருந்தி தற்கொலை செய்து கொண்டனர் இது குறித்து கொண்டலாம்பட்டி காவலர்கள் விசாரனை நடத்தி வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| **125.** | 21.09.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கமுதி தாலுகா சின்ன ஆனையூர் கிராமத்தைச் சேர்ந்தவர் தவசீ இவருடைய மகள் செல்வி. கணவன் மனைவி இருவரும் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டுயிருந்தனர். கணவர் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் செல்வி தூக்குப்போட்டு தற்கொலை செய்து கொண்டார், இது குறித்து பார்த்திபனூர் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| **126.** | 21.09.09 | **மதுரை மாவட்டம்:** கருப்பாயுரணி பாரதியார்புரம் பகுதியைச் சேர்ந்தவர் குருசாமி. ஒத்தக்கடை மலைசாமிபுரம் பகுதியைச் சேர்ந்த பிச்சை மகன் தென்பாண்டிக்கும், மீனாவுக்கும் திருமணம் நடைபெற்றது. இந்நிலையில் கூடுதல் வரதட்சனைக் கேட்டு கணவன் மனைவியை துன்புறுத்தியதாக மேலூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| **127.** | 22.09.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை பாத்திமா கல்லூரி அருகே வசித்து வரும் முத்து மகள் மணிமேகலை. இவர் சென்னையில் உள்ள தனியார் கல்லூரியில் பேராசிரியராக பணிபுரிகிறார். அதே பகுதியைச் சேர்ந்த SBI வங்கி அதிகாரி செந்தில்குமார் திருமணம் செய்து கொண்டார். கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக மணிமேகலை தல்லாக்குளம் காவல்நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **128.** | 22.09.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் பி.கே.என் கல்லூரி மாநில பெண்கள் ஹேண்ட்பால் இறுதிபோட்டியில் மதுரைச் சேர்ந்த வீராங்கனை ஒருவர் மயக்கமடைந்தார் உடனடியாக திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று மருத்துவமனையில் பணியில் இருந்த டாக்டர் நோயாளியை பார்க்காமல் செல்போனில் பேசியபடி சுமார் 15 நிமிடங்களுக்கு மேலாக டாக்டர் சிகிச்சைக்கு வரவில்லை. | அரசு ஊழியர் கடமை செய்யாமை | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| **129.** | 22.09.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை ஆனையூரைச் சேர்ந்த சுரேஷ்பாபு (31) இவருக்கு விஜயலட்சுமி என்ற மனைவியும், சூர்யா என்ற 11/2 வயது மகனும் உள்ளனர் குடும்பத்தில் வறுமையின் காரணமாக கணவன் மனைவியிடையே ஏற்பட்ட பிரச்சனையில் கணவன் மனைவி இருவரும் தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டனார். | வறுமை | தீக்கதிர் |
| **130.** | 22.09.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கடலாடி வட்டம் சாயல்குடி துரைசாமிபுரம் மாலையம்மாள் காம்பவுண்டில் வசிக்கும் பால்பாண்டி மகன் மாயி, வனப்பண்டி மகன் அருண்குமார் இருவரும் பொதுவிநியோகத்திட்டத்தில் அரிசி கடத்தலில் ஈடுபட்டதாக இரண்டு பேர் கைது. | ரேசன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| **131.** | 22.09.09 | **வேலூர் மாவட்டம்:** அரக்கோணம் சுவால் பேட்டை சுப்பராயன் தெருவில் விளையாட்டு புணர்வாழ்வு மருத்துவமனை செயல்பட்டு வருகிறது. அரக்கோணம் இருபில்ஸ் பேட்டையைச் சேர்ந்த ஒருவர் 7ம் வகுப்பு படிக்கும் மகளை அழைத்துச் சென்றார் சிறுமியை பரிசோதித்த மருத்துவர் சுரேஸ்பாபு சிறுமியை பாலியல் பலாத்காரம் செய்ய முயன்றதாக காவல்துறை புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **132.** | 22.09.09 | **மதுரை மாவட்டம்:** மதுரை அரசு மருத்துவமனையில் ஸ்டிரெச்சரி தள்ளவும், பிணத்தைப் பெறவும் கட்டயமாக 50ரூ முதல் 200ரூ வரை வசூல் செய்கின்றனர். | ஊழல் | தினமலர் |
| **133.** | 23.09.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகேயுள்ள தும்முசின்னம்பட்டியில் வி.ஏ.ஓ வாக பணியாற்றுபவர் சேர்மக்கனி இவர் தும்முசின்னம்பட்டி, சேதுபுரம் கிராமத்தில் கலைஞர் காப்பிட்டுத் திட்டத்தில் பதிவு செய்ய வந்தவரிடம் 30ரூ விதம் 640 பேரிடம் வசூலித்ததாக அருப்புக்கோட்டை ஆர்.டி.ஓ. கனேசன் சஸ்பென்ட் செய்ய உத்தரவிட்டார். | லஞ்சம் | தினகரன் |
| **134.** | 23.09.09 | **மதுரை மாவட்டம்:** கூடல் நகரைச் சேர்ந்தவர் ஜெயக்குமார். இவர் மேலூர் கல்வி மாவட்டத்தின் மாவட்ட கல்வி அதிகாரியாக பணியாற்றி வருகிறார். இவர் பிளஸ் 2 படித்த மாணவிக்கு அடிக்கடி எஸ்.எம்.எஸ். அனுப்பியுள்ளார். அம்மாணவியின் உறவினர் மணிகண்டன் ஜெயக்குமாரை அரிவாளால் வெட்டியுள்ளார். இது குறித்து தல்லாக்குளம் காவல் நிலையத்தில் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **135.** | 23.09.09 | **புதுக்கோட்டைமாவட்டம்:** கோட்டைப்பட்டிணத்திதைச் சேர்ந்த மீனவர்கள் 1000பேர் 243 விசைப்படகுகளுடன் கடலுக்கு | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீன்பிடிக்கச் சென்றனர். இவர்கள் மீது இலங்கை கடற்படையினர் துப்பாக்கிசூடு நடத்தி மீன்களை, பறித்துக் கொண்டு வலைகளை அறுத்து மீனவர்களை விரட்டினர். | | |
| **136.** | 23.09.09 | **மதுரை மாவட்டம்:** கிழக்குயில்குடியைச் சேர்ந்த செல்வம் மகன் விருமராஜா(29), அதே பகுதியைச் சேர்ந்த அருணாதேவிக்கும் திருமணம் நடந்தது. இருவரும் கருத்து வேறுபாட்டினால் விருமராஜா, மனைவியை, தாக்கி தாலியை பறிக்க முயன்றார் இதில் படுகாயமடைந்த அருணாதேவி நாகமலை புதுக்கோட்டை போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| **137.** | 23.09.09 | **மதுரை மாவட்டம்:** சிலைமான் அருகே உள்ள மீனாட்சி நகர் பகுதியைச் சேர்ந்தவர் அகமது மனைவி நாசரம்மான்(54). இவர் மகன் அலெக்சம், பேரன் மணியையும் ரமலானுக்கு அழைக்காதால் ஆத்திரத்தில் நாசரம்மாளை தாக்கினார் இது குறித்து சிலைமான் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்க எதிரான வன்முறை | தினகரன் |
| **138.** | 23.09.09 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி ஒன்றியம் பள்ளப்பட்டியைச் சேர்ந்த மாணிக்கத்தின் மகள் ஜெயந்தி. இவரை தொத்திலிங்கபுரத்தைச் சேர்ந்த செல்வபாண்டி, அழகுமணி, பூபதி ஆகியோர் சுமோ காரில் கடத்தியதாக கொட்டாம்பட்டி காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| **139.** | 23.09.09 | **கோவை மாவட்டம்:** தாராபுரத்தைச் சோந்தவர் சிவசுப்பிரமணியம்(33) இவர் தனியர் பஸ் கண்டக்டர், இவர் பல்லடத்தைச் சோந்த பொக்லைன் டிரைவர். கருணாகரன் மனைவி மகேஸ்வரியுடன், கள்ளத்தொடர்பு ஏற்பட்டு இருவரும் தனிவீடு எடுத்து வாழ்ந்து வந்தனர் இதனால் கருணாகரன் தனது மனைவியை அபகரித்த சிவசுப்பிரமணியம் மீது ஆசிட் முட்டையை வீசினார் கருணாகரனை போலீஸர் தேடுகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| **140.** | 24.09.09 | **திருச்சி மாவட்டம்:** டோல்கேட்டில் உள்ள கல்லூரி மாணவர்கள் விடுதி, இது ஆதிதிராவிட நலத்துறையின் கீழ் இயங்கும் விடுதி, இவ்விடுதியில் சுமார் 350 மாணவர்கள் தங்கி வருகின்றனர், விடுதி கட்டிடம் மிகவும் பழைய கட்டிடம் நேற்று முன் தினம் விடுதியின் மேல்சவர் இடிந்து விழுந்து கார்த்திக், மணிகண்டன், உள்ளிட்ட மாணவர்கள் படுகாயமடைந்தனர், மற்றும் விடுதியில் அடிப்படை வசதிகள் குறைவாகவும் உள்ளதை கண்டித்து போராட்டம் நடத்தினர், போராட்டம் நடத்திய மாணவர்கள் மீது போலீஸார் தடியடி தாக்குதல் நடத்தினர். | பள்ளி வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 141. | 24.09.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** கொடைக்காணல் அன்னை தெரசா பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக செயல்படும் அருணாசிவகாமி அனந்தகுமார். இவர் தலீத் மாணவிகளையும் தலீத் பேராசியர்கள், தலீத் ஊழியர்கள் அனைவரையும் சாதி சொல்லி திட்டுவதாகவும் அவமரியாதை செய்வதாக புகார் எழுந்துள்ளது, இதனைக் கண்டித்து மூட்டா அமைப்பின் சார்பாக ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 142. | 24.09.09 | **மதுரை மாவட்டம்:** காமராஜர் சாலையைச் சேர்ந்தவர் விஜயலட்சுமி(30), இதே பகுதியைச் சேர்ந்தவர் அருண்(38). அருண் தனது மனைவி விஜயலட்சுமியை கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாக மதுரை நகர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |
| 143. | 24.09.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் வட்டம் கொட்டாம்பட்டி ஊராட்சி ஒன்றியம், சூரப்பட்டி கிராம, இக்கிராமத்தில் வலக்குடிந்தைகுளம் கம்மாய தூர்வாரும் பணியில் ஈடுப்பட்டவர்களுக்கு அரசு நிர்ணயித்தா 80– ரூபாய்க்கு பதிலாக 55ரூ மட்டுமே வழங்கப்படுவதாக அப்பணியில் ஈடுபட்டோர் கொட்டாம்பட்டி திருச்சி சாலையில் மாரியலில் ஈடுபட்டனர். | ஊழல் | தினமணி |
| 144. | 24.09.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் சோழவந்தான் ரோடு பகுதியில் குடியிருப்பவர் சாந்தி இவருக்கும் அசோக் நகரைச் சேர்ந்த திருமுருகன். இருவருக்கும் கடந்த ஆண்டு திருமணம் நடந்தது. சாந்தியின் கணவன் குடும்பத்தினர் கூடுதல் வரதட்சனை கேட்டு துன்புறுத்தியதாகவும், பப்பாளி போன்றவை கொடுத்து கரு கலைக்கவும் செய்ததாக திருமங்கலம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| 145. | 25.09.09 | **கன்னியாகுமரி மாவட்டம்:** கன்னியாகுமரி மாவட்டம் புத்தேரியைச் சேர்ந்தவர் வைகுண்டம் இவரது மகன் மகேஸ் தலீத் சமுகத்தை சேர்ந்தவர். இவரும் தூத்துக்குடி சேர்ந்த சந்திரசேகர் மகள் திவ்யாவும் காதலித்து திருமணம் செய்து கொண்டனர், இத்திருமணத்தில் திவ்யாவின் தாய் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார், திவ்யாவின் தாய் அடையாளம் தெரியாதவர்களைக் கொண்டு மகேஸ்யை தாக்கியுள்ளார். இது குறித்து காவல் நிலையத்தில் புகார் கொடுத்தும் எந்தவித நடவடிக்கையில்லை மகேஸ் மதுரை உயர் நீதிமன்றத்தில் மனுதாக்கல் செய்தார் அதில் | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | மகேஸ்க்கு பாதுகாப்பளிக்க உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. | | |
| 146. | 25.09.09 | **கோவை மாவட்டம்:** வால்பாறையில் காஞ்சமலை எஸ்டேட் பகுதியில் 12 வயது சிறுமியை மணி(53) என்பவர் பாலியல் பலாத்காரம் செய்துள்ளார், இது குறித்து சிறுமியின் பெற்றோர் போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மீடியா டைம்ஸ் |
| 147. | 25.09.09 | **கோவை மாவட்டம்:** கோவை அருகே உள்ள வடவள்ளி தண்டபாளையம் தண்ணீர் தொட்டி வீதியைச் சேர்ந்தவர் நஞ்சுக்குட்டி இவரது மகன் கோவிந்தராஜன் (15). இவர் தனது நண்பருடன் ஒனாப்பாளையம் அருகே உள்ள பூச்சியூருக்கு சென்றுள்ளார் அங்கு கணேஸ் என்பவரின் ஏர்கன் துப்பாக்கியால் சுடப்பட்டார், இது குறித்து வடவள்ளி போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரித்து வருகின்றனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 148. | 25.09.09 | **விழுப்புரம் மாவட்டம்:** கள்ளக்குறிச்சி அடுத்த இந்திரா ஊராட்சி பள்ளி மாணவ/மாணவியர் சாப்பிட்ட சத்துணவில் பல்லி விழுந்ததால் 50 க்கு மேற்பட்ட குழந்தைகளுக்கு அஜீரணத்தால் அவதிப்பட்டனர் | பள்ளி வன்முறை | தமிழ்சுடர் |
| 149. | 25.09.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ஆர்.எஸ். மங்கலம் அடுத்துள்ள கிராமத்தைச் சேர்ந்தவர் பாண்டியன் இவரது மனைவி ஜோதி. இவரை காணவில்லை, இதுகுறித்து ஜோதியின் தந்தை செல்லத்துரை ஆர்.எஸ். மங்கலம் காவல் துறையில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 150. | 25.09.09 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே கட்டையன் பட்டியைச் சேர்ந்தவர் மணிகண்டன் இவரது மனைவி முத்துலெட்சுமி. இருவருக்கு திருமணமாகி 4 மாதத்தில் முத்துலெட்சமி தீக்குளித்து தற்கொலை செய்து கொண்டார் இது குறித்து மேலூர் காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 151. | 26.09.09 | **மதுரை மாவட்டம்:** திருநெல்வேலியைச் சேர்ந்தவர் சுப்பிரமணி இவரது மனைவி உமா. இருவருக்குள் கருத்து வேறுபாடு காரணமாக பிரிந்து விவாகரத்து பெற்றனர், உமா அதே பகுதியைச் சேர்ந்த அத்தியப்பன் என்பவருடன் காதல் ஏற்பட்டு திருமணம் செய்து கொண்டார், உமா பலருடன் கள்ளத்தொடர்பு வைத்திருந்ததால் அத்தியப்பன் உமாவை கொலை செய்தார், இது குறித்து மதுரை மாவட்ட நீதிமன்றம் அத்தியப்பனுக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது. | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |
| 152. | 26.09.09 | **திருவண்ணாமலை மாவட்டம்:** பெரும்பாக்கம் ரோடு பகுதியைச் சேர்ந்தவர் கண்ணன் இவர் டிப்பர்லாரி வைத்துள்ளார். இவர் லாரிக்கு பர்மிட் வாங்காமல் மணல் | லஞ்ச ஊழல் | தமிழ்சுடர் |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| | | எடுத்துள்ளார். இதனை ஆய்வு செய்த வாகன ஆய்வாளர் குணசேகரன் 25 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவல் துறையினரால் கைது செய்யப்பட்டார். | | |
| **153.** | 26.09.09 | **விழுப்புரம் மாவட்டம்:** சிங்காரபுரம் தாலுகாவைச் சேர்ந்த திருக்கணங்கூர் கிராம நிர்வாக அதிகாரியாக பணிப்புரிபவர் மணிவண்ணன். இவர் அதே பகுதியைச் சேர்ந்த பரமசிவம் மகன் ரவிக்குமார் சொத்து சான்றிதழ் வாங்க மணிவண்ணன் 2 ஆயிரம் ரூபாய் லஞ்சம் வாங்கியதாக லஞ்ச ஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தமிழ்சுடர் |
| **154.** | 26.09.09 | **விருதுநகர் மாவட்டம்:** ராஜபாளையம் பகுதியில் வரலாறு காணாத குடிநீர் பஞ்சத்தால், அன்நகரில். தண்ணீர் வந்தபோது வரிசையில் நின்ற மனோன்மணி என்ற பெண்ணனை லட்சுமி என்ற பெண் தடுத்து சன்டை போட்டார் பாதிக்கப்பட்ட மனோன்மணி மகன் மதன், மற்றும், உறவினர் அங்குராஜ் இருவரும் லட்சுமி வீட்டில் சென்று கத்தியால் குத்தி மற்றும் உருட்டு கட்டையில் தாக்கினார். இதுகுறித்து தெற்கு சரக போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| **155.** | 26.09.09 | **மதுரை மாவட்டம்:** புதுடெல்லியிலுள்ள தமிழ்நாடு இல்லத்தில் பணியாற்றி வருபவர் குருவன் இவர் சின்ன கட்டளை கிராமத்தில் வசித்து வந்தார். இவரது மனைவி லெட்சுமி இவரை முருகன் என்பவர் கடத்தி சென்றாதாக சேடப்பட்டி காவல்நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| **156.** | 26.09.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அருகே உள்ள சாந்தங்குடியைச் சேர்ந்த பாண்டி மனைவி வீரம்மாள்(45). அதே ஊரைச் சேர்ந்த அய்யாசாமி மகன்கள் மாயாண்டி, முத்துசாமி, குப்பாத்தி ஆகியோர் வீரம்மாள் வீட்டிற்க்கு சென்று வீட்டை சேதப்படுத்தி மற்றும் சாதி சொல்லி திட்டியதாக வீரம்மாள் திருமங்கலம் தாலுகா காவல் நிலையத்தில் புகார்., விரம்மாள் மகன் அய்யாசமி மனைவியை கடத்தியதாக தாலுகா காவல்நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **157.** | 26.09.09 | **தேனி மாவட்டம்:** --கம்மவார் சங்க பொறியில் கல்லூரியில் பயின்று வந்த அருந்ததியர் சமுக மாணவன் ரெங்கநாதன். கல்லுரி வளாகத்தில் மர்மமான முறையில் இறந்து கிடந்தார். காவல் துறையினர் விசாரனை நடத்தாமல் காலம் தாழ்த்தி வந்ததால் இந்த வழக்கிற்கு சி.பி.சி,ஐடி விசாரனை கோரி ஆர்பாட்டம் நடைபெற்றது. | தலித் எதிரான வன்முறை | தீக்கதிர் |
| **158.** | 27.09.09 | **நாகபட்டிணம் மாவட்டம்:** நாகையிலிருந்து 3 படகுகளில் கடலுக்குச் சென்ற 18 மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்பட்டனர். | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினமணி |

மக்கள் கண்காணிப்பகம்

| | | | | |
|---|---|---|---|---|
| 159. | 27.09.09 | **சென்னை மாவட்டம்:** கும்மிடிப்பூண்டி பஜாரில் பாத்திரக் கடை மற்றும், எலெக்டராணிக்கல் பொருள்கள் கடை நடத்தி வருபவர் தங்கராஜ். இவரிடம், ரயில்வேக்கு சொந்தமான செம்பு கம்பியை வாங்கியதாக இரயில்வே பாதுகாப்பு படை இன்ஸ்பெக்டர் துரைசாமி 20 ஆயிரம் லஞ்சம் வாங்கியதாக லஞ்சஒழிப்புத்துறை காவலர்களால் கைது செய்யப்பட்டார். | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 160. | 27.09.09 | **மதுரை மாவட்டம்:** பாளையங்கோட்டை மத்திய சிறைசாலையில் கீழாப்பாட்டத்தைச் சேர்ந்த செல்லத்துரை, சன்னியாசி, ஆகிய இருவரும் கொலை வழக்கிற்காக சிறையில் அடைக்கப்பட்டனர். கடந்த 24ந்தேதி சிறையில் நடந்த மோதலில் மேற்கண்ட இருவரும் பலத்த காயம் அடைந்தனர் இதில் செல்லத்துரை கொலை செய்யப்பட்டார் இது குறித்து நெல்லை மாநகர உதவி பேலீஸ் கமிஷனர் ராமசந்திரன் பெருமாள்புரம் இன்ஸ்பெக்டா ராஜபால் வழக்கு பதிவு செய்து விசாரனை நடத்தி வருகிறார். | காவல் நிலைய வன்முறை | தினத்தந்தி |
| 161. | 27.09.09 | **மதுரை மாவட்டம்:** விருதுநகர் மாவட்டம் சிவகாசியைச் சோந்தவர் சந்திரசேகர்(25) இவர் சிவகாசியிலிருந்து மதுரைக்கு அரசு பஸ்சில் வந்து கொண்டிருந்தார். இவரிடம் லேப்டாப் கம்ப்யூட்டர் சிடிகள் கொண்ட பையை திருடன் திருடிக்கொண்டு பஸ்யைவிட்டு குதித்துவிட்டார். இது தொடர்பாக சந்திரசேகர் கரப்பாயூரணி போலீஸில் புகார் தெரிவித்தார் அவர்கள் மாட்டுதாவணி காவல்நிலைய புறக்காவல் நிலையத்திற்கு அனுப்பிவைத்தனர் இவருடைய புகாரை ஏற்க மறுத்து ஒவ்வொரு காவல்நிலையமாக அலைகழித்தனர். | காவல்நிலைய வன்முறை | தினகரன் |
| 162. | 27.09.09 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் பாண்டியன் நகரைச் சேர்ந்த கோவிந்தன் மகள் ராஜலட்சுமி, இவரை செம்பட்டியைச் சேர்ந்த அடைக்கலம், ஆத்தியப்பட்டியைச் சேர்ந்த பாலகிருஷ்ணன், பாலியல் பலாத்காரம் செய்துள்ளனர் இருவரையும் போலீஸார் கைது செய்தனர். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |
| 163. | 27.09.09 | **தூத்துக்குடி மாவட்டம்:** திருச்செந்தூர் அருகே வெங்கடேஷ் பண்ணையார் நினைவு தின ரத ஊர்வலத்தில், ஏற்பட்ட பிரச்சனையில் டிஸ்.பி. கார் அரசு வேன் கண்ணாடிகள் உடைக்கப்பட்டன, இதில் சாலை மறியல் செய்தவர்களை போலீஸார் தடியடி நடத்தினர் அதில் சுடலை என்பவர் படுகாயம் அடைச்தார் | காவல் நிலைய வன்முறை | தினமலர் |
| 164. | 27.09.09 | **நாகப்பட்டிணம் மாவட்டம்:** கீச்சாங்குப்பத்தில் 18 மீனவர்கள் மீன் பிடிக்க சென்றனர். கப்பலில் வந்த இலங்கை கடற்படையினர் துப்பாக்கியால் சுட்டபடி | மீனவர்களுக்கு எதிரான வன்முறை | தினமலர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மீனவர்களின் படகில் இறங்கிய இலங்கை கடற்படையினர் மீன்கள், மீன்பிடி சாதனங்களை பறித்துக் கொண்டு மீனவர்களின் உடைகளை கலைத்து நிர்வாணப்படுத்தினர் | | |
| **165.** | 28.09.09 | **மதுரை மாவட்டம்:** பெத்தானியாபுரத்தைச் சேர்ந்தவர் விரபத்திரன்(36) இவரது மனைவி உமாராணி கணவன் மனைவியிடையே ஏற்பட்ட தகராறில் வீரபத்திரன், மனைவி உமாராணியை கொலை செய்தார், இதுகுறித்து திலகர்திடல் போலீஸார் வழக்கு பதிவு செய்து விசாரனை செய்து வருகிறார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | மாலைமலர் |
| **166.** | 28.09.09 | **தேனி மாவட்டம்:** தேனி கலெக்டர் வீட்டின் வழியாக மணல் கடத்தலில் ஈடுபட்ட குமார், மணி, இருவரையும் கலெக்டர் முத்துவிரன் பிடித்தார். | மணல் கடத்தல் | தமிழ்முரசு |
| **167.** | 29.09.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி அருகே எஸ்.எஸ். புரத்தைச் சேர்ந்தவர் நாகராஜ்(50) மனைவி சரண்யா, இவரை அல்லி நகரத்தைச் சோந்த முத்தைய மகன் செல்வம்(எ)செல்வகுமார் கடத்தி சென்றதாக ஆண்டிபட்டி காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| **168.** | 29.09.09 | **இராமநாதபுரம் மாவட்டம்:** பரமக்குடி அரசு சேதுபதி அரசினர் மேல் நிலைப்பள்ளியில் சுற்றுசுவர் இல்லாததால் அப்பள்ளி மைதானத்தில் இரவு நேரங்களில் குடிமகன்களின் பார் ஆக மாறி வருகிறது. இது குறித்து அதிகாரிகள் கண்டு கொள்வதில்லை. | பள்ளி வன்முறை | தமிழ்சுடர் |
| **169.** | 29.09.09 | **திருவள்ளுவர் மாவட்டம்:** பேரம்பாக்கம் அருகே உள்ள கல்லம்பேடு கிராமம் பூவறூரில் செங்கல் சூளையில் வேலை பார்க்கும் அசரம்அலி சமீர் இவரது மனைவி சாஹீமா குடும்ப தகராறில் அசரப்அலி தன் மனைவி மற்றும் மகனை கழுத்தை நெறித்து கொலை செய்தார் இது குறித்து--- மப்பேடு காவல் நிலையத்தில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினத்தந்தி |
| **170.** | 30.09.09 | **விருதுநகர் மாவட்டம்:** சிவகாசி நேரு ரோடு பத்ரகாளியம்மன் கோவில் அருகே தனியாருக்கு சொந்தமான லாரி ஷெட்டிலிருந்து வெளியூர் பட்டாசு ஏற்றிகின்ற வேலையில் மாத்தாப்பு குச்சிகளில் உராய்வு ஏற்பட்டு தீடீரென தீ விபத்து ஏற்பட்டதில் லாரி ஷெட்டின் மேலாளர் நந்திராஜ் என்பவர் சம்பவ இடத்தில் கருகி இறந்தார். இது குறித்து சிவகாசி நகர் போலீஸில் புகார். | | தினகரன் |
| **171.** | 30.09.09 | **மதுரை மாவட்டம்:** ஏழுமலை அருகே உள்ள சங்ககவுண்டன்பட்டியைச் சேர்ந்தவர் சரவணன்(35) இவரது மனைவி சுபாராணி(20) இவரை காணவில்லை, இது குறித்து ஏழுமலை போலீஸில் புகார். | பெண்களுக்கு எதிரான வன்முறை | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| 172. | 30.09.09 | **சென்னை மாவட்டம்:** சென்னை நந்தனத்தில் உள்ள மத்திய கலால்துறை, சேவை வரி பிரிவின் கண்காணிப்பளாராக இருந்தவர் சிவபாலன். இவர் ஒரு கம்பெனியின் சேவை வரி ரிட்டன்களை செட்டில் செய்வதற்கு ரூ25 ஆயிரம் லஞ்சம் வங்கியதற்கு சி.பி.ஐ. சிறப்பு கோட்டு 3 ஆண்டு காலம் சிறை தண்டனை வழங்க தீர்ப்பு. | லஞ்ச ஊழல் | தினத்தந்தி |
| 173. | 30.09.09 | **தேனி மாவட்டம்:** ஆண்டிப்பட்டி அருகே உள்ள டி.சுப்புலாபுரம் கிராமத்தில் அரசு மேல்நிலைப், அரசு மருத்துவமனை மற்றும் குடியிருப்பு பகுதியின் அருகே நாழி மலைகளில் கல்குவாரி அமைத்து பாறைகளை வெடி வைத்து உடைப்பதை தடுத்து நிறுத்த மற்றும் பல முக்கிய கோரிக்கை வைத்து இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினர் கண்டன ஆர்பாட்டம் நடத்தினர். | பொது மக்களுக்கு இடையூரு விளைவித்தல் | தமிழ்சுடர் |
| 174. | 30.09.09 | **விருதுநகர் மாவட்டம்:** அருப்புக்கோட்டை அருகே உள்ள சுக்கிலநத்தம் கிராமத்தில் தலீத் மக்களுக்கு குடியுரிமை மறுக்கப்பட்டு வீட்டுவரி ரசீது வழங்க மறுக்கும் சுக்கிலநத்தம் ஊராட்சி நிர்வாகத்தை கண்டித்து தீண்டாமை ஒழிப்பு மூன்னனி சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தினர் | தலீத் எதிரான வன்முறை | தமிழ்சுடர் |
| 175. | 30.09.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் ஒத்தக்கடை பாலம் அருகே பாரதிபுரம் மணி நகரைச் சேர்ந்த சின்னையா (40). இவர் 60 கிலோ ரேஷன் அரிசியை கடத்திய போது உணவுப்பிரிவு இன்ஸ்பெக்டர் சீனிவாசனிடம் பிடிபட்டார். | ரேஷன் அரிசி கடத்தல் | தீக்கதிர் |
| 176. | 30.09.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** கம்பிளியம்பட்டி ஊராட்சியில் கிராமபுற வேலை உறுதித்திட்டத்தில் ரூ35 கூலி வழங்குவதை எதிர்த்தல். மக்களின் அடிப்படை பிரச்சனைக்களை தீர்க்கக் கோரியும் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக தர்ணா போராட்டம் நடத்தப்பட்டது. | ஊழல் | தீக்கதிர் |
| 177. | 30.09.09 | **திண்டுக்கல் மாவட்டம்:** ஒட்டன்சத்திரம் தாலுகாவில் உள்ள இருள குடும்பன்பட்டியில் தலீத் மக்கள் செல்லும் மயானப் பாதையை ராசப்பக் கவுண்டர் என்பவர் ஆக்கிரமித்துள்ளார். இதனை அகற்றகோரி தீண்டாமை ஒழிப்பு முன்னனி சார்பாக ஒட்டன் சத்திரத்தில் நடத்தப்படவுள்ளது. | தலித்து எதிரான வன்முறை | தீக்கதிர் |
| 178. | 30.09.09 | **சிவகங்கை மாவட்டம்:** சிவகங்கை அருகே இலுப்பக்குடி கிராமத்தில் சோந்தவர் பெருமாள், இவரது மகன் சேகர். இவரையும் இவரது உறவினர் கௌரியை அப்பகுதியைச் சேர்ந்த ராமசந்திரன் உள்ளிட்ட சிலர் இவரை சாதி செல்லி திட்டியும், உருட்டு கட்டையால் தாக்கியுள்ளனர். இது குறித்து பூவந்தி போலீஸார் வழக்கு பதிவு செய்து 3 பேரை கைது செய்துள்ளனர். | தலீத் எதிரான வன்முறை | தீக்கதிர் |



மக்கள் கண்காணிப்பகம்